**அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி – 2017**

---

அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1975 இன் 13 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி அதிகாரச்சட்டத்தின் 65(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன. நிதி அதிசாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் வங்கியின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2016 திசெம்பர் இற்கான ரூபா 2,040,000 கடன் விடுவிப்பு மற்றும் 1,100,658 மூலதன மீட்பு 2017 ஆம் ஆண்டிற்கான எல்லை கணக்கிற்கு பதிவிடப்பட்டிருந்த அதேவேளை 2017 திசெம்பர் மாதத்துடன் தொடர்புடைய வயபாடிரிய (Wayabadiriya) செயற்திட்டத்தின் கீழ் கடன் விடுவிப்பு மற்றும் மூலதன மீட்பு முறையே ரூபா 420,000 மற்றும் ரூபா 1,112,305 எல்லைக் கணக்கிற்கு பதிவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 ஆம் ஆண்டு மற்றும் முன்னைய ஆண்டில் கிளை நடைமுறைக் கணக்கொன்றிற்கு நேரடியாகப் பெறப்பட்ட ரூபா 2,436,835 மொத்த தொகையொன்று மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 விபரிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஈடு (Mortage), ஈபிஎவ், மற்றும் தனிநபர்கடன்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் முறைமையினால் உருவாக்கப்பட்ட கடன் கலவை (Portfolio) மற்றும் மீதிகளின் பட்டியல்களின் பிரகாரம் கடன் மீதிகளுக்கிடையே ரூபா 6,975,092 தேறிய வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. இந்த வித்தியாசங்கள் இணக்கஞ்செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நட்டக்கழிவு கணிப்பீட்டிற்கு பயன்படுத்தப்பட்ட பட்டியல்களில் காட்டப்பட்ட கடன் மீதிகள் மற்றும் ஈடு (Mortage), ஈபிஎவ், தனிநபர் மற்றும் நுண்நிதி கடன்கள் தொடர்பில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட மீதிகளுக்கிடையே ரூபா 234,228 தேறிய வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) உள்ளூர் கிளைக் கணக்குகளில் ரூபா 4,268,346 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஈ) அனுப்பும் படிவங்களில் காட்டப்பட்ட தொகை மற்றும் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஈபிஎவ் மற்றும் ஈரீஎவ் கணக்குகளுக்கான வங்கி பங்களிப்புக்கிடையே ரூபா 2,923,635 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(உ) உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றின் முன்னைய காலப்பகுதி சரிப்படுத்தலின் கீழ் ரூபா 493,558 மீதியொன்று இனங்காணப்படாத வித்தியாசங்களாக காட்டப்பட்டிருந்தது.

(ஊ) சேமிப்புக்கள் திட்ட வைப்புக்களின் (Saving Scheme deposits) முறைமை மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களிலுள்ள மீதிகளுக்கிடையே ரூபா 250,867 மொத்த வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(எ) நிதிக்கூற்றுக்களில் தோற்றமளித்த மீதி மற்றும் விளம்பரப்படுத்தல் மற்றும் மேம்படுத்தல் செலவினங்களுடன் தொடர்புடைய சந்தைப்படுத்தல் பிரிவின் பதிவுகளில் தோற்றமளித்த மீதிகளுக்கிடையே ரூபா 2,632,245 வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(ஏ) நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட பொருத்தமில்லாத கணக்கொன்றின் மீதி மற்றும் தொடர்புடைய முறைமையினால் உருவாக்கப்பட்ட பட்டியல்களுக்கிடையே ரூபா 28,883,653 வித்தியாசம் அவதானிக்கப்பட்டிருந்தது.

### 2.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்கு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களில் வைப்புக்கள் மற்றும் முற்பண செலுத்துகைகளின் கீழ் ரூபா 5,362,744 முற்பண மீதியொன்றில் உள்ளடக்கப்பட்டுக் காணப்பட்ட 2016 ஆம் ஆண்டிற்கு முன்னரிலிருந்து மீதிகீழ்க் கொண்டுவரப்பட்ட ரூபா 2,917,537 மீதியொன்று மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், இந்த மீதியின் நம்பகத்தன்மை மற்றும் மீள்அறவிடுகை கணக்காய்வில் அறிந்துகொள்ளமுடியாதிருந்தது.

(ஆ) வங்கியினால் பேணப்பட்ட கணக்கீட்டு முறைமையின் பிரகாரம், கிளை ஆலோசனை கணக்கின் மீதி செலவு மீதியொன்றாகக் காணப்படும். எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கிளை ஆலோசனைக் கணக்கில் ரூபா 7,529,740 தீர்ப்பனவுசெய்யப்படாத வரவு மீதியொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) பொதுவாக கோரிக்கை உறுதிச்சீட்டுக் கணக்கில் (Claim voucher account) வரவு மீதியொன்று காட்டப்படவேண்டிய போதிலும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குறித்த கணக்கில் ரூபா 23,590,021 அசாதாரணமான செலவு மீதியொன்று காட்டப்பட்டிருந்தது.

(ஈ) ரூபா 1,513,448 தொகையான ஆறு கணக்குகளின் மீதிகள் நிச்சயமற்றதாகக் காணப்பட்ட அந்த மீதிகளின் மீள்அறவிடுகையினை இனங்கண்டிராது இரண்டு வருடங்கள் காலப்பகுதியொன்றுக்கும் அதிகமாக ஏனைய கடன்பட்டோர்களின் கீழ் மீதிகீழ் கொண்டுவரப்பட்டிருந்தது.

(உ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஏனைய கடன்பட்டோர்களின் கீழ் சேமலாப நிதியத்திற்கான அட்டுறு உதவிக் கணக்கு மற்றும் வரவு வரி கணக்கில் முறையே ரூபா 1,512,882 மற்றும் ரூபா 6,696 வரவு மீதியொன்று காட்டப்பட்டிருந்தது. தொடர்புடைய தரப்பினர்களினால் அந்த மீதி உறுதிப்படுத்தப்பட்டுக் காணப்படாததிலிருந்து இந்த மீதியின் மீள்அறவிடுகை உறுதிப்படுத்தமுடியாது காணப்பட்டது.

(ஊ) 1988 ஆம் ஆண்டிலிருந்து 2014 வரை நானாவித கடன்பட்டோர் மீதியில் ரூபா 139,936 தொகையொன்று உள்ளடக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இந்த மீதியினை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய கடன்பட்டோர்களின் கீழ் தேறுகைக் கணக்கின் மீதான காசோலைகளில் ரூபா 14,265,463 அசாதாரண வரவு மீதியொன்று காட்டப்பட்டிருந்தமையினால், நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ஏனைய கடன்பட்டோர்கள், சமமான தொகையினால் மிகைத்துக் குறிப்பிடப்பட்டிருந்தது.

(ஏ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலுத்தவேண்டிய பிடித்துவைத்தல் வரிக் கணக்கில் ரூபா 3,005,380 இனங்காணப்படாத வரவு மீதியொன்று காட்டப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் இனங்கண்டு குறித்த மீதியினை தீர்ப்பனவுசெய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஐ) வங்கியினால் பின்பற்றப்பட்ட முறைமையின் பிரகாரம், ஊழியர் சேமலாப நிதியத்தின் மீதியின் மீது அளிக்கப்பட்ட ஈட்டுக் கடனுக்கான செயன்முறைப்படுத்தல் கட்டணங்கள் கடன் அளிக்கப்பட்ட மாதத்தினைப் பின்தொடர்ந்து வருகின்ற 20 நாட்களுக்குள் தொழில் உதவி ஆணையாளருக்கு செலுத்தப்படல் வேண்டும். எவ்வாறாயினும், செலுத்தவேண்டிய ACL கட்டணங்கள் கணக்கில் ரூபா 179,500 இனங்காணப்படாத வரவு மீதியொன்று காட்டப்பட்டிருந்ததுடன் ரூபா 216,500 தொகையொன்று தீர்ப்பனவுசெய்யப்பட்டிராது 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான கடன்கொடுத்தோர்களாக ஒரு வருடத்திற்கும் மேலாக தொடர்ந்தும் காணப்பட்டிருந்தது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஏனைய சொத்துக்களின் கீழ் ரூபா 22,350,414 வரவு மீதியொன்று காட்டப்பட்டிருந்த போதிலும், போதுமான தகவலின் பற்றாக்குறை காரணமாக இந்த தொகையின் அறவிடுகை நிச்சயமற்றதாகக் காணப்பட்டது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முன்னைய முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களினை பின்பற்றுவதுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | கணனிக்கான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று தரப்பட்ட படிவத்தின் பிரகாரம் பேணப்படவேண்டிய போதிலும், ரூபா 127,189,798 பெறுமதியுடைய கணனிகள் தொடர்பில் வங்கியினால் அவ்வாறானதொரு பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| 396 ஆம் இலக்க நிதிப்பிரமாணம் | ரூபா 1,792,650 கூட்டுத்தொகையான 6 மாதங்களினை விட அதிகமான செலுத்துகைக்கு சமர்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பில் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2.4 போதியளவான அதிகாரத்தால் ஆதரவளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

2016 யூலை 29 ஆந் திகதிய 16.07.83.07 ஆம் சபை தீர்மானத்தின் பிரகாரம், ரூபா 200,000 இனை விட அதிகமான மதிப்பிடப்பட்ட பெறுமதியுடைய மதிப்பீடுகள் உதவி பொது முகாமையாளரினால் அங்கீகரிக்கப்படல் வேண்டும். இந்த தேவைப்பாட்டிற்கு முரணாக, கிரிபத்கொட கிளையினை இடம்மாற்றுவதற்கான ரூபா 314,145 பெறுமதியுடைய மதிப்பீடு பிரதம முகாமையாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

## 3. நிதிசார் மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், வங்கியின் நிதிசார் விளைவுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 706 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்துடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 379 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபமாகக் காணப்பட்டமையினால் நிதிசார் விளைவுகளில் ரூபா 327 மில்லியன் அதிகரிப்பொன்றைக் காட்டுகின்றது. ஆண்டிற்கான நட்டக் கழிவுக் கட்டணம் ரூபா 190,115,585 இனால் அதிகரித்தமை பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

மீளாய்வாண்டிற்கான வங்கியின் நிதிசார் விளைவு ரூபா 173,457,667 இற்கு அதிகரித்திருந்த போதிலும், தனிநபர் ஊதியங்கள், பெறுமானத்தேய்வு மற்றும் அரசிற்குச் செலுத்தவேண்டிய வரியினைக் கணக்கிற்கு எடுத்த பின்னர் 2013 ஆகஸ்ட் ஆண்டிற்கான வங்கியின் பெறுமதி சேர்க்கை ரூபா 933,770,458 இலிருந்து 2016 ஆம் ஆண்டிற்கு ரூபா 1,662,254,618 இற்கு தொடர்ச்சியாக அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் அது முன்னைய ஆண்டிற்கு எதிராக மீளாய்வாண்டிற்கு ரூபா 344,599,816 அல்லது 21 சதவீதத்தினால் குறைவடைந்து காணப்பட்டது.

### 3.3 பகுப்பாய்வுரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.3.2 முக்கியமான நிதிசார் விகிதங்கள்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுக்கான வங்கியின் சில முக்கியமான கணக்கீட்டு விகிதங்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2017 | | 2016 | |
|---|---|---|---|---|
| | எஸ்எம்ஐபீ | உரிமம்பெற்ற விசேட வங்கித் துறை | எஸ்எம்ஐபீ | உரிமம்பெற்ற விசேட வங்கித் துறை |
| **இலாபத்தன்மை விகிதங்கள்** | | | | |
| i. தேறிய வட்டி எல்லை | 4.35 | 3.2 | 5.36 | 3.5 |
| ii. சராசரி உரிமை மூலதனம் மீதான திரும்பல் | 3.52 | 19.2 | 9.50 | 18.3 |
| iii. சராசரி சொத்துக்கள் மீதான திரும்பல் | 0.97 | 1.5 | 2.03 | 1.5 |

**மூலதன போதுமை விகிதங்கள்**

--------------------------------------------------------------

| | | | | |
|---|---|---|---|---|
| தட்டு I | 23.74 | 12.8 | 22.96 | 13.5 |

**திரவதன்மை விகிதங்கள்**

-------------------------------------------------

| | | | | | |
|---|---|---|---|---|---|
| i. | திரவச் சொத்துக்கள் / வைப்புக்கள் | 22.10 | 61.6 | 22.82 | 61 |

தேறிய வட்டி எல்லை உரிமம் பெற்ற விஷேட வங்கி துறையினை விட 1.15 சதவீதத்தினால் உயர்வாக இருந்த போதிலும், சராசரி உரிமை மூலதனத்தின் மீதான திரும்பல் 15.68 சதவீதத்தினால் தாழ்வாகக் காணப்பட்டது. மேலும், 2016 மற்றும் 2017 ஆகிய இரண்டு ஆண்டுகளில் வங்கியின் திரவத்தன்மை உரிமம்பெற்ற விசேட வங்கி துறையினை விட தாழ்ந்த மட்டத்தில் காணப்பட்டது.

**4. செயற்பாட்டு மீளாய்வு**

---------------------------------------------

**4.1 செயலாற்றல்**

--------------------------------

**4.1.1 செயற்பாடும் மீளாய்வும்**

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் 5 ஆம் இலக்கின் பிரகாரம், 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான தனிநபர் கடன் விகிதங்களின் இலக்குகள் முறையே 3 சதவீதம் மற்றும் 5 சதவீதத்திற்கு குறைக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும், 4 கிளைகள் தனிநபர் கடன் இலக்கினை அடைவதற்கு தவறியிருந்ததுடன் 12 கிளைகள் ஈட்டுக் கடன் இலக்கினை அடைவதற்கு தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) வங்கியின் கிளை செயற்படுத்தல் பிரிவினால் வழங்கப்பட்ட கடன் பணவளிப்பு இலக்குகளின் பிரகாரம், 24 கிளைகளில் 6 கிளைகள் 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளபடியான இலக்குகளின் 75 சதவீதத்தினை அடையப்பட்டிருக்கவில்லை.

(இ) சந்தைப்படுத்தல் திணைக்களம் 2020 அளவில் ரூபா 2 பில்லியன் இலாபத்தினை அடைந்துகொள்ளும் பிரதான இலக்குடன் 2016/2017 ஆம் ஆண்டிற்கான அதன் சந்தைப்படுத்தல் திட்டத்தினை தயாரித்திருந்தது. எவ்வாறாயினும், வங்கியின் வரிக்குப் பின்னரான 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2017 ஆம் ஆண்டில் ரூபா 257,493,476 அல்லது 59 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது.

(ஈ) 2016 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்ட குழந்தை வங்கியல் எண்ணக்கரு (The Child banking Concept) 2017 திசெம்பர் 31 வரையிலும் அடிப்படை மட்டத்தில் காணப்பட்டது.

(உ) 1975 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் 2(2) ஆம் பிரிவின் பிரகாரம், இந்த சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நிதிசார் மற்றும் ஏனைய உதவிகளினை வழங்குவதன் மூலம் விவசாயம், கைத்தொழில் மற்றும் வீடமைப்பின் அபிவிருத்தியில் உதவுவது வங்கியின் நோக்கமாகக் காணப்படுகின்றது. அதற்கமைய, 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான மத்திய வங்கிக்கு வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம், வங்கி வாடிக்கையாளர்களுக்கு விவசாயம் மற்றும் வீடமைப்பு கடனாக அதன் கடன் கலவையின் 99.9 சதவீதத்தினை வழங்கியிருந்தது.

(ஊ) வங்கி மாறுபடும் விகிதமாக ஆண்டிற்கு AWPLR + 12% வட்டியில் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்து ரூபா 2 பில்லியன் கடனொன்றை வங்கி பெற்றிருந்தது. AWPLR 10% ஆகக் காணப்பட்டால், உடன்படிக்கையின் பிரகாரம் வட்டி விகிதத்தின் அரையாண்டு மீளமைப்பினை புறக்கணக்கிற்கு ஆண்டிற்கான வட்டியாக அண்ணளவாக ரூபா 224 மில்லியனை வங்கி செலுத்த வேண்டிக் காணப்படும். எவ்வாறாயினும், 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான செயற்பாடற்ற கடன் விகிதம் 22 சதவீதம் என அறிக்கையிட்டது. இந்த பின்னணிகளை கருத்திற் கொண்ட பின்னர் இந்தக் கடன் நிதிகளினை பயன்படுத்துவதன் மூலம் அதி உத்தம திரும்பலொன்றை வங்கியினால் விளைவிக்க முடியுமா என்பது ஐயத்திற்குரியதாகக் காணப்பட்டது.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

(அ) 1996 இல் ஏற்பட்ட மோசடி தொடர்பில், நிதிக்கூற்றுக்களில் ஏனைய கடன்பட்டோர்களில் மோசடி கணக்காக ரூபா 2,400,000 தொகையொன்று காட்டப்பட்டிருந்தது. இருப்பினும், 2017 திசெம்பர் 31 வரையிலும் சம்பவத்தை தெளிவாக்கி நட்டத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், ரூபா 9,613,360 பெறுமதியுடைய நிலையான சொத்துக்கள் 2017 ஆம் ஆண்டில் வங்கியினால் அகற்றப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அகற்றப்பட்ட வகைகளினை இனங்கண்டு புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்குப் பதிலாக பழமை வாய்ந்த வகைகளின் கிரயம் புத்தகங்களிலிருந்து அகற்றப்பட்டிருந்தது.

### 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

(அ) கிடைக்கப்பெற்ற தகவலின் பிரகாரம், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது கடன் பணவளிப்பின் பெறுமதி ரூபா 2,381 மில்லியன் அல்லது 29 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் கடன்களின் எண்ணிக்கை 429 அல்லது 3 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. மேலும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ஆண்டின் போது மொத்த பணவளிப்பில் முறையே சிறிய மற்றும் நடுத்தரளவு முயற்சிகள் மற்றும் நுண் நிதியிடல் கடன்கள் 2,975 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் தனிநபர் கடன்கள் 79 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ஆ) வங்கி ரூபா 32,540 மில்லியன் தொகையான கடன் வசதிகளினை அறிந்திருந்ததுடன் அதில் ரூபா 7,466 மில்லியன் அல்லது 23 சதவீதம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயலற்றவைகளாக காட்டப்பட்டிருந்தது. மேலும், மொத்த ஊழியர் சேமலாப நிதிக் கடன்களில் ரூபா 5,894 மில்லியன் தொகையொன்று அல்லது 18 சதவீதம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான செயலற்றவைகளாக அறிக்கையிடப்பட்டது.

(இ) செயலற்ற கடன்களின் வயதுப் பகுப்பாய்வு தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2017 திசெம்பர் 31 இல் உள்ளபடியான செயலற்ற கடன்களின் மொத்த தொகை ரூபா 7,460 மில்லியனாகக் காணப்பட்டதுடன், அதில், ரூபா 4,106 மில்லியன் அல்லது 55 சதவீதம் 1 வருடத்திற்கும் மேலாப நிலுவையாக தொடர்ந்தும் காணப்பட்டதுடன், குறித்த பெறுமதியில் ரூபா 3,670 மில்லியன் தொகையொன்று ஊழியர் சேமலாப நிதி கடன்களினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(ii) 3 வருடங்களுக்கும் மிகையான செயலற்றவைகளின் பெறுமதியில், ரூபா 66 மில்லியன் தொகையொன்று கையளிக்கப்பட்ட சொத்துக்களினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

(iii) மொத்த செயலற்ற கடன் மீதிகளில் 07 பாரிய செயலற்ற ஈட்டுக் கடன்கள் ரூபா 48 மில்லியன் தொகை 3 வருடங்களுக்கும் மேலாக நிலுவையாக தொடர்ந்தும் காணப்படுகின்றதுடன் அதில் ரூபா 46 மில்லியன் கூட்டுத்தொகையான 04 கடன்களுக்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) பாரிய செயலற்ற தனிநபர் கடனின் மொத்த செயலற்ற கடன் மீதிகளில், ரூபா 18 மில்லியன் 3 வருடங்களுக்கும் மேலாக நிலுவையாக தொடர்ந்தும் காணப்படுகின்றது.

**4.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

2016 ஏப்ரல் 29 ஆந் திகதிய பிஈடீ 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம், ஊழியர்களின் சம்பளத்திலிருந்து உழைக்கும் போதே செலுத்தும் வரி கழிப்பனவு செய்யப்படல்வேண்டும். அதற்கு முரணாக, ஊழியர்களின் சம்பளத்திலிருந்து கழிப்பனவு செய்திராது வங்கியினால் ரூபா 20,122,583 தொகையான உழைக்கும் போதே செலுத்தும் வரி செலுத்தப்பட்டிருந்தது.

**4.5 வெளிப்படையான முறைகேடுகள்**

மோசடியான ஆவணங்கள் மற்றும் மோசடியான தகவல்களினை வழங்கி 47 தனிநபர்களினால் ரூபா 68.34 தொகையான மொத்தப் பெறுமதியுடைய கடன்கள் பெறப்பட்டிருந்ததுடன் மேற்குறித்த கடனின் மொத்த தொகை 2017 திசெம்பர் 31 இல் செயற்பாடற்ற மீதியில் உள்ளடக்கப்பட்டுக் காணப்பட்டது.

**4.6 பதவியணியினர் நிர்வாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வங்கியின் பதவியணியினர் நிலைமையின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் முறையே 471 மற்றும் 365 ஆகக் காணப்பட்டமையினால் 106 வெற்றிடங்கள் காணப்பட்டன.

(ஆ) மேற்குறித்த வெற்றிட நிலமைகளில் மூன்று பிரதிப் பொது முகாமையாளர்கள் பதவிகள், மூன்று உதவிப் பொது முகாமையாளர்கள் பதவிகள் மற்றும் நான்கு பிரதம முகாமையாளர்களின் பதவி உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் அவை வங்கி தொழிற்பாடுகளின் சுமூகமான செயற்பாட்டிற்கு தாக்கமளிக்கக்கூடும்.

**4.7 சந்தைப் பங்கு**

2013 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை வங்கியின் வைப்புக்கள் மீதான அடிப்படையில் சந்தைப் பங்கினை விசேட அனுமதிபெற்ற வங்கி துறையுடன் ஒப்பிடுகையில் 2 அடிப்படை புள்ளிகளினால் அதிகரித்திருந்தது. மேலும், 2013 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை வங்கியின் சொத்துக்கள் மீதான அடிப்படையில் சந்தைப் பங்கினை விசேட அனுமதிபெற்ற வங்கி துறையுடன் ஒப்பிடுகையில் 17 அடிப்படை புள்ளிகளினால் அதிகரித்திருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுமையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

வங்கியின் பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் பதவி 2016 சனவரி 01 இலிருந்து தொடர்ந்தும் வெற்றிடமாகக் காணப்படுகின்றது.

### 5.2 பெறுகை மற்றும் ஒப்பந்த செயன்முறை

#### 5.2.1 பெறுகைகள்

(அ) 2017 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம், தலைமை அலுவலகத்திற்கான புதிய கட்டத்தின் கொள்வனவுக்கு மற்றும் ஹொரண கிளைக்கான காணி மற்றும் கட்டிடமொன்றிற்கு முறையே ரூபா 1,300 மில்லியன் மற்றும் ரூபா 62 மில்லியன் தொகைகள் மதிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின் பிரகாரம், புதிய கட்டத்தின் பெறுகை ஆரம்ப கட்டத்தில் காணப்பட்டது. ஹொரண கிளைக்கான காணி கொள்வனவுக்கு வங்கி தவறியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) அரச பெறுகை வழிகாட்டலின் 4.2.1(உ) அத்தியாயத்தின் பிரகாரம், பிரதான பெறுகைத் திட்டம் ஆறு மாதங்களினை மிகைக்காத இடைவெளிகளில் தொடர்ச்சியாக நாளதுவரையாக்கப்படல் வேண்டும். வங்கி அந்த வழிகாட்டலுடன் இணங்கியிருக்கவில்லை.

(இ) 2017 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம், வங்கி ஐந்து கிளைகளில் இயலளவினை விரிவாக்க எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், வங்கி மேற்குறித்த இலக்குகளினை அடைவதற்கு முழுமையாக தவறியிருந்தது.

(ஈ) பெறுகை வழிகாட்டலின் 2.3.2(இ) அத்தியாயத்தின் பிரகாரம், விபரக்குறிப்புக்கள் மற்றும் மீளாய்வு மற்றும் அங்கீகாரத்திற்கு ரீஈசீஎஸ் (TECs) இற்கு அதனை சமர்ப்பிப்பது உள்ளடங்கலாக வரைவு விலைமனு ஆவணங்களின் தயாரிப்பில் பெறுகை செயற்பாடொன்றின் பதவியணியினர் பொறுப்பாகக் காணப்படுவர், எவ்வாறாயினும், 8 கிளைகளின் பகுதிகளாக பிரித்தல் தொடர்பில் வங்கியினால் அதற்கமைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்காததுடன் 2017 திசெம்பர் இல் உள்ளவாறு ரூபா 2,370,878 தொகையொன்று தலைமை அலுவலகத்திற்கு ஏற்பட்டிருந்தது.
மேலும், பெறுகை வழிகாட்டலின் 6.3.2 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், விலைமனு ஆவணங்களில் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் விலைமனுக்கள் மூடப்படுவதுடன் தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாததுடன் திறக்கப்படாது திருப்பியனுப்பப்படும். இந்த தேவைப்பாட்டிற்கு முரணாக மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தத்துடன் தொடர்புடைய பெறுகை இறுதித் திகதிக்கு பின்னர் சமர்பபிக்கப்பட்ட விலைமனுதாரர்க்கு ஒப்பந்ததாரரொருவர்க்கு அளிக்கப்பட்டிருந்தது.

(உ) அரச பெறுகை வழிகாட்டல் 2006 இன் 5.1.1(அ) பந்தியின் பிரகாரம், பெறுகை நிறுவகம் தொழில்நுட்ப விபரக்குறிப்புக்கள், வரைபடங்கள் உள்ளடங்கலாக விலைமனு ஆவணங்களின் வரைவினை ஆரம்பித்துவைக்க வேண்டும். ரூபா 2,112,357 பெறுமதியுடைய கணனி உதிரிப்பாகங்களின் கொள்வனவுக்கு விலைமனு ஆவணங்களினை வரையும் போது வங்கி தொழில்நுட்ப விபரக்குறிப்புக்களினை சமர்ப்பித்திருக்கவில்லை.

**5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு**

கடனுடன் தொடர்புபட்ட செலவினங்கள், பதவியணியினர் கற்கை மற்றும் பயிற்சிக்கான செலவினம், நிலையான சொத்துக்கள் மற்றும் கடன் பெறுதல் தொடர்பில் பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான பெறுமதிகளுக்கிடையே குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடானது விளைத்திறனானதொரு முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

**06. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட வித்தியாசங்கள் காலத்திற்குக் காலம் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | பொதுப் பேரேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல் | கணக்கீட்டுக் குறைபாடுகள் மற்றும் விளக்கமளிக்கப்படாதவற்றை கண்டறிவதற்கு கவனம் செலுத்தப்படவில்லை. |
| (இ) | சந்தைப் பங்கினை பேணுதல் | சந்தைப் பங்கின் ஏற்றுக்கொள்ளக்கூடிய வளர்ச்சி அடையப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பதிவேடுகளைப் பேணுதல் - | இருப்பு இலக்கங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் விபரம் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. நாளேடுகள் நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |